பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆவணி 10 றம்ழான் 10 இதழ் 195

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-8-77

விற்பனையாகிறது

**பணமோபணம்**

பல மேடைகள் கண்டு பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை மகிழ்வித்த உன்னத சமூக நாடகம்.

★ எழுதியவர்:-

அராலியூர்

ந. சுந்தரம்பிள்ளை B. A.

112 பக்கங்கள் - விலை ரூபா 2-50

# கோட்டையிலிருந்து இன்று யாழ்ப்பாணம் வரும் நேரடி ரயில்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விசேஷ ரயில்ஒன்று இன்று வருகிறது.

இந்த ரயில் இன்று காலை 7-40க்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு இன்று மாலை சுமார் நான்கு மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விசேஷ ரயிலில் சுமார் 800 பேர் வருகின்றார்கள் இந்த ரயில் கோட்டையிலிருந்து நேரடியாக யாழ். வருகிறது. நாளையும் இப்படி ஒரு ரயில் சேவை நடைபெறும்.

பாதுகாப்பு அமைச்சு இச்சேவையை இலவசமாக ஒழுங்கு செய்துள்ளது.

கொழும்பிலும் மற்றும் பல பகுதிகளிலும் நேற்றுப்பெரிய சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் எங்கும் பகட்டமான நிலை இன்னும் நீங்கவில்லை.

நேற்று வெள்ளவத்தையில் அலெக்ஸாந்திரா பிளேசுக்கு அருகில் ஒரு கடைக்கு எறிகுண்டு வீசப்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். இக்குண்டு வீச்சைத் தொடர்ந்து அச்சமடைந்த கடை ஊழியர் ஒருவர் கடையிலிருந்து வெளியே குதித்து அலெக்ஸாந்திரா வீதிவழியாக ஓடிக்கொண்டிருந்தார் இவரைக் கவனித்துக் கண்காணிப்புக் குழுஉறுப்பினர் ஒருவர் கடைக்குக் குண்டுவீசிக்கொள்ளையடித்துக் கொண்டு ஓடுவதாகச் சந்தேகித்து விசில் ஊதவே மற்றவர்கள் ஓடிவந்து அந்தக் கடைச்சிப்பந்தியைத் தாக்கியதில் அவர் உயிர் இழந்த பரிதாபமான சம்பவம் நேற்று நிகழ்ந்தது

### கப்பல்சேவை ரத்து

நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலைமையைத் தொடர்ந்து தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல்சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

### முன்னாள் மந்திரியும் மகனும் கைது

முன்னாள் கலாச்சார அமைச்சர் திரு ரி. பி தென்னக்கோனும் அவரது மகன் எம். எம. தென்னக்கோனும் கண்டிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவ லெப்டினட் கேணல் ஒருவரும் இரண்டு டாக்டர்கள், ஒரு வர்த்தகர் உட்பட மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பலருடைய தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### துப்பாக்கிகள் ஒப்படைக்கவேண்டும்

பாதுகாப்பு நடவடிக்கையாக பொதுமக்களிடமுள்ள அனுமதி பெற்ற துப்பாக்கிகளை திருப்பிப் பெற்றுள்ளது. துப்பாக்கிகளை ஒவ்வொருவரிடமிருந்தும் பெற்றதற்கான ரசிதுகளை பொலிஸார் வழங்கி வருகின்றனர். நிலைமை சீரானதும் மீண்டும் இத்துப்பாக்கிகள் வழங்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று முதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனுமதிபெற்றவர்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பெறும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. புதிதாக லைசன்சுகள் வழங்கப்படமாட்டா.

### இந்திய தூதருக்கு அழைப்பு

அகதிகளாக கிளிநொச்சியில் வந்து தஞ்சம் புகுந்துள்ள இந்திய வம்சாவழியினரை வந்து பார்வையிடுமாறு கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. வி. ஆனந்தசங்கரி இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய வம்சாவழியினர் மேலும் கிளிநொச்சிக்கு அகதிகளாக வந்துகொண்டிருப்பதாகவும் இவர்கள் பலரும் திரும்பிச்செல்ல விரும்பவில்லையென்றும் இங்கேயே தங்கியிருக்க விருப்பம் தெரிவிக்கின்றனரென்றும் கூறப்படுகிறது.

# காங்கேசனுக்கு இன்று காலை வரும் கப்பல்கள்!

## கடற்படைப் படகுகள் அகதிகளை கரை சேர்க்கும்

**கொழும்பிலிருந்து 1934 தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு வரும் மூன்று கப்பல்களும் இன்றுகாலை ஒன்பது மணியளவில் காங்கேசன்துறைத் துறை முகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.**

**இலங்கைக் கப்பற்கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'லங்கா ராணி', 'லங்கா ரத்ன' 'லங்கா கல்யாணி' ஆகிய மூன்று சரக்குக்கப்பல்களிலும் அகதிகளாகத் தமது பாரம்பரிய மண்ணில் வந்திறங்கும் தமிழ்மக்களை வரவேற்று அவரவர்களின் சொந்த இடங்களுக்குப் பவுத்திரமாக அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.**

### கடற்படைப் படகுகள் கரைசேர்க்கும்

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இன்று காலை கப்பல்கள் வந்துசேர்ந்ததும் அவற்றிலிருந்து அகதிகள் கடற்படைப் படகுகள்மூலம் கரைக்குக் கொண்டுவரப்படுவார்கள். கரையில் கப்பல் ஏஜண்டும் காங்கேசன்துறைப் பட்டின சபையின் முன்னாள் தலைவருமான திரு, க. ஜெயபாலசிங்கம் அகதிகளுக்கு சிற்றுண்டி அளிப்பார். பின்னர் இவர்கள் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கிருந்து அவரவர் செல்லவேண்டிய இடங்களுக்கு பஸ்வண்டிகள் மூலம் அனுப்பிவைக்கப்படுவர் துறைமுகத்தில் அகதிகளை வரவேற்று உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கும் சகல ஏற்பாடுகளும் பொலிஸ் அதிபர் திரு, ஆர். சுந்தரலிங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெறும்.

### காங்கேசனில் ஏற்பாடு

கப்பல்களை முதலில் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்குக் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டபின்னர் பருத்தித்துறைத் துறைமுகம் எனமாற்றம் செய்யப்பட்டு, பின்னர் பல வசதிகளையும் உத்தேசித்து காங்கேசன்துறைத்துறைமுகத்திலேயே அகதிகளை இறக்குவதெனக் கடைசியாகத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயல்அதிபர் திரு. மு சிவசிதம்பரம், எதிர்க்கட்சித்தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம்,மற்றும் கூட்டணி எம் பீக்கள்,பிரமுகர்கள் ஆகியோரும் திரு ஜெயபாலசிங்கம், யாழ் மாவட்ட அரசாங்க இணைப்பதிகாரி திரு ருத்திரா ராஜசிங்கம், பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோரும் நேற்று காங்கேசன்துறைத்துறைமுகத்துக்குச் சென்று உரிய ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

### வைத்தியப்பிரிவும் இருக்கும்

கலவரத்தால் பாதிக்கப்பட்டுவரும் அகதிகளில் உடல்நிலைகுன்றியுள்ளவர்களைக் கவனிப்பதற்காகக் கப்பல்களில் டாக்டர்கள் வந்துகொண்டிருக்கின்றனர். இதே சமயம் கப்பலிலிருந்து கரையிறங்கியதும் சிகிச்சை அளிக்கப்படவேண்டியவர்களை கவனிப்பதற்காகக் கரையில் விசேஷ வைத்தியப் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட விருக்கிறது.

### பஸ்,விமானம் கப்பல்கள்

நாட்டின் பல இடங்களிலும் ஒரு வாரத்துக்குள் வீடுவாசல்களையும் உடைமைகளையும் இழந்து உடுத்ததுணி மட்டுமே மிஞ்சிய நிலையில் உயிர்தப்பிப் பலவேறு இடங்களிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த ஆண் பெண் குழந்தைகளுமான தமிழ் மக்கள் பஸ்களிலும் லொறிகளிலும் கார்களிலும் மட்டுமல்லாமல் இப்போது கப்பல்களிலும் தமது சொந்த மண்ணுக்கு வந்து சேருகின்றனர். சிலர் விமானத்திலும் வந்துசேர்ந்து கொண்டிருக்கின்றனர்.

### புனர்வாழ்வும் புகலிடமும்

கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் அகதிகளாக வந்துசேர்ந்தவர்கள் சிலர் தமக்கெனச் சொந்த இடமென்று ஒன்று இல்லாததால் அந்தந்த இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

இவர்களின் எதிர்காலம் பற்றி ஒரு முடிவு செய்வதற்கு முன்னர் அடுத்த இரண்டுமாத காலத்துக்கு இவர்களைப் பரா

து

மரிப்பதுபற்றி இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிற ய இவர்களில் சிலர் தமது பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்பக்கூடுமென்பத. லேயே இந்த ஆலோசனை இங்கேயே தங்கிவிட விரும்புபவர்களுக்குப் புகலிடமளித்துப் புனர்வாழ்வளிப்பது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட ''பாதிக்கப்பட்ட தமிழர் புனருத்தாரண சபை'' யினர் நேற்று யாழ். கச்சேரியில் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற ஒரு மாகாநாட்டில் கலந்துகொண்டனர். அரசாங்க அதிபர் திரு. விஜயபாலா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ.ஏ. ஜோசப், பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோரும் மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்து கொண்டார். புனர் வாழ்வுப் பணிக்கு ''பாதிக்கப்பட்ட தமிழர்புனருத்தாரணச் சபை' பொறுப்பு வாய்ந்தசபையாக அங்கீகரிக்கப்பட்டது.

இச்சபையின் நடவடிக்கைகளைப் பரவலாக்கி, பாதிக்கப்டவர்களுக்கு நிரந்தர நிவாரணம் அளிப்பதற்கு உதவுமுகமாக அரசாங்க அதிகாரிகளான மேலதிக அரசாங்க அதிபர் திரு. யோசேப், சமூக சேவை உதவிப் பணிப்பாளர் திரு. கங்காதரன் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோரும் இச்சபையில் நிர்வாக உப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மதத்தலைவர்கள், வர்த்தக ஸ்தாபனப் பிரதிநிதிகள் யாழ் லயன்ஸ், யாழ் ரோட்டரி கிளப், யாழ் வைமன் கிளப் தலைவர்கள் தேசிய பேரவை உறுப்பினர்கள் இருவர் முதலான அதிமுக்கிய பிரமுகர்களைக் கொண்ட இச்சபையின் தலைவராக திரு. யே ஜி. அரியரத்தினமும் உப தலைவராக டாக்டர் யோகு பசுபதியும், திரு. லங்கா நேசையா, திரு. ரீ. குணரத்தினம் ஆகியோரும் கடமையாற்றுவர்.

[3-ம் பக்கம் பார்க்க]

### சாரணர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி நாட்டில் நடைபெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்ட மக்களை கப்பல்கள்மூலம் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டுவரும் வேளையில், வலி

[(3ம் பக்கம் பார்க்க)

# கலவரத்தின் பின்னணியில் அரசியல் சக்தி

## அரசாங்கம் அறிக்கை

கொழும்பு, வியாழன்

நாட்டில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்கள் வெளித்தோற்றத்தில் இனக்கலவரமாகத் தோன்றிய போதும் இதன் பின்னணியில் அரசியல் சக்திகளே இயங்கி வருகின்றன என்பது துலாம்பரமாகத் தெரியவந்துள்ளது.

இன்றுவெளியான அரசாங்க அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் விபரம் வருமாறு:

கடந்தசில நாட்களாக நாட்டில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் வெளித்தோற்றத்துக்கு இனக்கலவரமாகத் தோற்றிய போதும், இதன் பின்னணியில் அரசியல் சக்திகள் இயங்குவது நம்பகரமாக அறியப்படுகிறது.

கடந்த தேர்தலில் தோல்வியுற்றசிலர் அரசின் முற்போக்கு அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டு பொறுமை கொண்டு அவற்றை முறியடிக்க மக்களைத் தவறான பாதையில் இட்டுச்செல்ல முனைந்திருக்கிறார்கள்.

அரசின் தேசிய அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தை இவர்கள் அறிந்துகொண்டு இச்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவற்றை விசாரிக்க அரசு விரைவில் கமிஷன் ஒன்றை நியமிக்கவுள்ளது.

கொள்ளையடித்தல், தீவைத்தல் முதலிய வன்முறைச் சம்பவங்கள் இப்போது குறைந்துள்ளதாகவும் அரசின் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

யாழ்.துப்பாக்கிச்சூடு மரணவிசாரணை

# பெரியகடையில் புகை கிளம்பியதைக் காணவில்லை

## கான்ஸ்டபிள் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'நாகவிகாரைப்பக்கம் செல்லும்போதுதான் புகை கிளம்புவதைக் கண்டேன். பெரிய கடைப்பக்கத்தில் புகை கிளம்பியதை நான் பார்க்கவில்லை'.

யாழ்ப்பாணம் கலவரத்தில் துப்பாக்கிச்சூட்டிற்குபலியான மூவரின் மரணவிசாரணையில், பொலிஸ்கான்ஸ்டபிள் டொன் அலோசியஸ் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் திரு கே. வி. நவரத்தினம் முன்னிலையில், நேற்று மரணவிசாரணை நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க, சட்டத்தரணிகள் எஸ். நடராசா, ஆர் விஸ்வநாதன், ஜிம்மிராசரத்தினம், ரி. சோமசுந்தரம், சிவா. கணேசன் ஆகியோர் ஆஜரானார்கள். பொலிஸ்தரப்பில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சரத் சில்வா ஆஜரானார்

நீதவானின் கேள்விகளுக்கு கான்ஸ்டபிள் அலோசியஸ் பதிலளித்தார்.

நீதவான்: சம்பவம் நடந்த இடத்தில், கூட்டத்தினரை நிறுத்தாவிடில் சுடுவேன் என்று கூறினீர்?-ஆம்.

நீதவான்: அதனை ஜீப் சாரதி சிவஞானம் கூறியிருக்கலாமே?-என்னைத்தான் கூறும் படி இன்ஸ்பெக்டர் சொன்னார்

நீதவான்: நாகவிகாரையை நோக்கிச்சென்றபோது புகை கிளம்புவதைக் கண்டீர்?-ஆம்.

நீதவான்: பெரியகடைப் பக்கத்தில் புகை கிளம்புவதை கண்டீரா?- நான் அதைப் பார்க்கவில்லை.

நீதவான்: றிசேல் பொலிஸைத் தவிர வேறு உயர் அதிகாரி எவரும் பொலிஸ்நிலையத்தில் இருக்கவில்லை?- இருக்கவில்லை

நீதி: பெரியகடைப் பகுதியில் குழப்பம் நடப்பதாகக்கூறினார்?-ஆம்.

நீதி: எங்கே குழப்பம் நடப்பதென்று உமக்கு அப்போ தெரியாது?- தெரியாது.

நீதி: சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தபோது கடையில் தீ எரிந்துகொண்டிருந்தது?- கடை எரியவில்லை வீதியில் தான் எரிந்துகொண்டிருந்தது. கூட்டத்தினர் கடையிலிருந்து பொருட்களைக் கொள்ளையடித்துக்கொண்டிருந்தனர்

நீதி: 2-ம் சூட்டுக்குப் பின்னரும் கூட்டத்தினர் கடையில் பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தனர்?- கடையில் எடுத்த பொருட்களைக் கொண்டு ஓடினார்கள்.

நீதி: ஏன் அதன் பின்பும் நீங்கள் சுடவில்லை?- கூட்டத்தினர் கலைந்து சென்றுவிட்டனர்.

நீதி: நீர் ஒன்றரை மணி நேரம் அங்கு நின்றீர்?- ஆம்.

நீதி: கூட்டத்தினர் கலைந்து சென்றபின் பொருட்கள் இருந்தனவா?- இல்லை.

நீதி: அங்கு நடந்ததுபற்றி எவரும் புகார் செய்தனரா?- இல்லை.

நீதி: பெரியகடையில் குழப்பம்பற்றி உமக்குத் தெரியாது?- தெரியாது.

நீதி: ஏ எஸ். பி. நூர்டீனுடன் வேறு யார் வந்தார்கள்? -சிலர் வந்தார்கள். எனக்கு யாரென்று தெரியாது.

நீதி: எல்லாரும் பஸ்நிலையத்திற்குச் சென்றார்கள்?-ஆம்.

நீதி: அப்போது பஸ்நிலையத்தில் நிலைமை எப்படியிருந்தது? -பஸ்நிலையத்தில் பொலிசார் நின்றார்கள். கொட்டடிப் பக்கம் பலத்த சத்தம் கேட்டது.

நீதி: அங்கு கூட்டத்தினர் பொருட்களைக் கொண்டு சென்றனரா? இல்லை.

நீதி; எத்தனை மணிக்குத் திரும்பிச் சென்றீர்?- இரவு 7 மணிக்கு.

நீதி: 7 மணி வரை அங்கு நின்றீர்?-ஆம்.

நீதி: மற்ற இடங்களில் எவரும் கொள்ளையடிக்கவில்லையா?-இல்லை.

---

# வீட்டிலிருந்த ஆசிரியர் குத்திக் கொலை

## தொல்புரத்தில் சம்பவம்

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த ஆசிரியர் எஸ் நடராசா (வயது 5?) தமது சொந்த வீட்டில் வைத்து நால்வர் கொண்ட கோஷ்டியினரால் கத்தியினாலும், கண்டங்கோடரியினாலும் வெட்டி கொலைசெய்யப்பட்டுள்ளார். கொலைசெய்யப்பட்ட ஆசிரியரின் மகன் ந சந்திரகுமார்கழுத்தில் கத்தி வெட்டுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

ஸ்தலத்திலேயே பலியான காலஞ்சென்ற ஆசிரியர் நடராசா தமது வீட்டுக் கதவுகளைப் பூட்டி உள்ளே இருந்த போது, செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் ஐவர் கொண்ட வாலிபர் கோஷ்டி ஒன்று வேலியைப் பிரித்து உள்ளே சென்று, குசினிக் கதவை உடைத்து வீட்டுக்குள் இருந்த நடராசாவைக் கொலை செய்ததாகவும், தகப்பனைத் தாக்கியவர்களை மகன் தாக்க முயன்றபோது மகனுக்கு வெட்டு விழுந்ததாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உறவு முறையானவர்களுக்கிடையே ஏற்பட்ட சிறு சச்சரவுகளையடுத்துவெளியாரைக்கொண்டு செய்விக்கப்பட்ட கொலை என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அதிபர் திரு மு. மகேஸ்வரன் ஸ்தலத்திற்கு வந்து முறைப்பாடுகளைப் பதிவு செய்துகொண்டபோதே மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. விசாரணைகள் நடைபெறுகின்றன.

சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளதால் இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை.

---

## அரசுக்குப் பாராட்டு

கொழும்பு, வியா.

மக்களின் உணவுக் கஷ்டத்தைப் போக்குவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா தேசிய அரசுப்பேரவையில் பாராட்டினார்.

பழைய அரசுவிட்ட பிழைகளைத் திருத்துவதற்காகவே இந்த அரசை மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள் என்றும் இதுசம்பந்தமாகஅரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தான் முழு ஆதரவையும் வழங்குவதாகவும் திரு. பண்டாரநாயக்கா கூறினார். வாரத்துக்கு எட்டு றாத்தல் தானிய உணவை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையை அவர் பாராட்டினார். கடந்த ஏழு ஆண்டுகளாக இதனை முன்னைய அரசினர் செய்ய முடியவில்லை என்று அவர் சொன்னார்

1970-ம் ஆண்டு கலவரங்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசாங்க ஊழியர்கள்பலர் மாற்றப்பட்டிருப்பதாகவும

---

## இன்று துர்க்காதேவி ஆலய தேர்

யாழ்ப்பாணம், வெள்ளி

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர் உற்சவம் இன்று நடைபெறுகிறது.

இவ்வுற்சவத்தையொட்டிய காலைப்பூசை அதிகாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும். முற்பகல் 9-30 மணிக்கு அம்பாள் தேரில் பவனிவரும் காட்சி நிகழும்.

விசேடநிகழ்ச்சிகளாக சங்கீத பூஷணம் திருமதி மோகனாம்பிகை கணேசனின் பக்திப் பாடல்களும், கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் பஜனை அடியார்கள் துர்க்கைஅம்பாள் ஆலயப் பஜனை அடியார்கள் ஆகியோரின் பஜனைகளும் இடம்பெறும்.

திரு. எஸ். விசுவலிங்கம் குழுவினர், நாதஸ்வரக்கலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினர், நாதஸ்வர வாரிதி எஸ். சிதம்பரநாதன் குழுவினர், கானமூர்த்தி சகோதரர்கள், இராசதுரை, வரதராசா குழுவினரின் நாதஸ்வர தவில் கச்சேரிகளும் இடம் பெறும். (கா)

---

## ஆஸ்பத்திரியில் பன்சிலால்

புதுடில்லி, ஆக. 25

நிதி மோசடிக் குற்றத்திற்காக சிறைவைக்கப்பட்டுள்ள இந்திய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பன்சிலால் இரத்தம் அழுத்தநோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்த்மா நோயாளியான இவர் இருதய நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட போது நவம்பர் மாதம் 5-ம் திகதிவரை நீதிமன்றக் காவலில்வைக்கப்பட்டுள்ளார்.

---

## வரி விளம்பரம்


### தேவை

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், ஆமணக்கம் விதைகள் தொகையாகத் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794

### வகுப்புகள்

வகுப்புகள் யாவும் வழமைபோல் ஆரம்பமாகிவிட்டன என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகிறோம். ''யாழ். சட்ட நிலையம்'', பிரதான வீதி, யாழ்ப்பாணம். 6895


---

## கார் தீக்கிரை

பண்டத்தரிப்பு, வியாழன்

மானிப்பாயிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று நேற்று முன்தினமிரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத விஷமிகளின் செயலாக இது இருக்கலாமெனக் கருதப்படுகிறது கார் முற்றாக எரிந்து சாம்பரான நிலையில் காணப்படுகின்து.

காரின் உரிமையாளர் இது தொடர்பாக ஆனைக்கோட்டைப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

---

கிளிநொச்சிப்பகுதியில்:

# அகதி முகாம்களில் தொற்று நோய் அபாயம்?

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சித் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள, பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகள் முகாம்களில் தொற்றுநோய்கள் உருவாகுவதற்கான அறிகுறிகள் உருவாகியுள்ளன. தற்போது கிளிநொச்சித் தொகுதியில் உள்ள 12 மகாவித்தியாலயங்களில் 3500க்கு அதிகமான இந்திய வம்சாவளியினர் தங்கியிருக்கின்றனர். இவர்களில் சிலருக்கு தொற்று நோய்கள் இருப்பதை அவதானித்து, கிளிநொச்சித்தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு வி ஆனந்தசங்கரி, உதவி அரசாங்க அதிபர், சமூகசேவைப்பகுதி அதிகாரிகள் ஆகியோர் சுகாதாரப்பகுதியினருடன் அவசரமாக தொடர்பு கொண்டுள்ளனர்.

தொற்றுநோய் அபாயம் ஏற்படலாம் என்ற காரணத்தால் அகதிகளை அனுமதிப்பதற்கு மாற்று நடவடிக்கையாக வேறுமுகாம்களை நிறுவுவதற்கு, முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது இயங்கும் முகாம்களில் உள்ள அகதிகளுக்கு பொதுமக்களே உணவு, உடை வழங்கி வருகின்றனர். சுமார் 10,000க்கு அதிகமான அகதிகள் இன்றும், நாளையும், பொல்காவலை, மீரிகம், மதவாச்சி, மின்னேரி, கல்கமுவ, உகுவல, குளியாப்பிட்டிப் பகுதிகளிலிருந்து வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளில் பெரும்பாலோர், தாம் குடியிருந்த மனை, சொத்துக்களை இழந்து அகதிகளாக வந்துள்ளவர்கள் முகாமில் தங்கியிருந்தால் தான் தான் அரசாங்கம் நிவாரணம் அளிக்குமென நம்புகின்றார்கள். இதுவரை அரசாங்கம் உதவி எதுவும் வழங்கவில்லையென திரு வி. ஆனந்தசங்கரி கூறினார். (கெ)

---

"இலங்கைத் தமிழர் நிலைமை:

# மொரார்ஜியை எம். ஜி. ஆர். உடன்சந்திக்கவேண்டும்"

சென்னை, ஆக 25

''இலங்கைத் தமிழர்களின் இன்றைய அவலநிலை குறித்து தமிழ் நாடு முதல்அமைச்சர் திரு. எம். ஜி. ஆர். புதுடில்லி சென்று பிரதம மந்திரி திரு. மொரார்ஜிதேசாயைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.''

இவ்வாறு தமிழ்நாடு சட்டமேல் சபையில் பேசிய திரு. சிவஞானம் கேட்டுக்கொண்டார்.

இலங்கைத் தமிழ் மக்களின் அவலநிலையை நேரில் பார்ப்பதற்காக ஒரு மத்திய அமைச்சரை இலங்கைக்கு அனுப்ப வேண்டியதன் அவசியத்தை திரு. எம். ஜி. இராமச்சந்திரன் திரு. மொரார்ஜி தேசாயிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் திரு. சிவஞானம் கேட்டுள்ளார்

இது பிரதமமந்திரியின் கொள்கைக்குப் புறம்பான நடவடிக்கையென்றும் அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இந்திய அரசு உதவவேண்டும் என்றும் திரு. சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

சட்டமேல்சபையில் மேலும் பலரும் இலங்கைத் தமிழ் மக்களின் அவல நிலைகுறித்து கவலை தெரிவித்தனர். (இ)

# யாழ். கலவரத்தின்போது 25 லட்சம் ரூபா நஷ்டம்

## மரண விசாரணையில் உதவிப் பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தின்போது கொள்ளையடித்தல், தீவைத்தல், உடமைகளை சேதப்படுத்தல் போன்ற சம்பவங்களில் சுமார் 25 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது.''

யாழ்ப்பாணக் கலவரத்தில் பலியான மூவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அதிபர் திரு. என். எச். நூர்டீன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றதில் நீதவான் ஜே. வி. நவரத்தினம் முன்னிலையில் இம்மரணவிசாரணை நடைபெற்றுவருகிறது.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நூர்டீன் மேலும் கூறியதாவது: ''நான் சாவகச்சேரி ஆனைக்கோட்டை, பளை, நெடுந்தீவு, சங்கானை ஆகியபொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பாக இருக்கின்றேன். யாழ்ப்பாண நகருக்கு பொறுப்பாக உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சில்வா இருந்தார் சம்பவம் நடந்த தினம் அவர் வேறு இடத்திற்கு சென்றிருந்ததினல் 14-ம் திகதி நான் யாழ்ப்பாணத்திற்கும் பொறுப்பாக இருந்தேன்.

''என் வீடு யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் நக்கா வீதியில் இருக்கிறது 15 ம் திகதி காலை 8-15 மணிக்கு நான் ஆஸ்பத்திரிவீதி வழியாக ஜீப் வண்டியில் பொலிஸ் நிலையம் நோக்கி சென்றுகொண்டிருந்தேன். நான் ஆஸ்பத்திரி வீதிக்கு வந்ததும் அங்கு பெருங் கூட்டம் நின்றது, நான் தனியாகவே ஜீப்பில் சென்றுகொண்டிருந்தேன். கெ. எஸ். கே. சந்தியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். சந்திக்கருகில் என் ஜீப்பை நோக்கிக் கூட்டத்தினர் கற்களை வீசினர் ஒருவர் துப்பாக்கி நுனியால் என் ஜீப் வண்டியின் முன்பக்கத்தை அடிப்பதை அவதானித்தேன். ஜீப்பின் இடதுபக்க ஜன்னல் சேதமடைந்தது. அச்சமயம் பழைய மார்க்கட் எரிந்து கொண்டிருப்பதை அவதானித்தேன்.

### 2 ஆயிரம் பேர் கூடிநின்றனர்

சுமார் 2000 பேர் அங்கு ரோட்டில் கூடி நிற்பதை அவதானித்தேன். அங்கு பொலிசார் எவரும் நிற்பதை நான் காணவில்லை. கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பஸ் நிலையத்தில்பஸ்கள் எதுவும்காணப் படவில்லை. டாக்ஸி நிலையத்தில், டாக்ஸிகள் எதுவும் காணப்படவில்லை.

நான் வெகுவிரைவாக காங்கேசன்துறை வீதிவழியாக பொலிஸ் நிலையத்தை அடைந்தேன்.

நீதவான்: வழியில் கூட்டத்தினர் பொலிசாரைத்தாக்கியதைக் கண்டீரா?—இல்லை.

### தாக்கியதாகக் கூறினர்

உதவிபொலிஸ் அதிபர் திரு. நூர்டீன் தொடர்ந்து கூறியதாவது:—

''நான் வீரஸிங்கம் மண்டபத்தை சமீபித்ததும், 2 றிசேவ் கான்ஸ்டபிள் ஓடிவந்தார்கள். கூட்டத்தினர் தங்களைத்தாக்கி விட்டதாகக் கூறினார்கள். துப்பாக்கி ஒன்றைப்பறித்துவிட்டதாகவும் இவர்கள் கூறினர்கள். றிசேவ் கான்ஸ்டபிள் சிவபாலன் என்பவரின் துப்பாக்கியே பறிக்கப்பட்டது. அவர்களை என் ஜீப்வண்டியில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றேன்

தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டருக்கு ஆயுதப் பொலிஸாரைத் தயாராகுமாறு தெரிவித்தேன். நகரத்தில் பெரும் கூட்டத்தினர் நிற்பதாகவும், பழைய மார்க்கெட் எரிவதாகவும் அவரிடம் கூறினேன். ஆயுதப்பொலிசார் புறப்பட்டனர். நானும் அவர்கள்பின் ஜீப்பில் சென்றேன்.

### வீதிகளில் தடைகள்

நகரவீதிக்குச் சென்றதும், வீதிகள் தடைசெய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு சந்திகளிலும் பொருட்கள் எரிந்து கொண்டிருந்தன. கன்கிறீட் கற்களாலும், வேறுபொருட்களாலும் வீதிகள் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தன.

காலை 8-35 மணியளவில் ஆயுதப்பொலிஸார் அவ்விடத்திற்குச் சென்றனர். நான் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரை பஸ் நிலையத்தில் சந்தித்தேன்.

''பெருந்திரளாக மக்கள் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவர்களை எச்சரித்தேன். பொலிஸ் அதிபர் தம்மை உடனடியாகச் சந்திக்கும்படி றேடியோ செய்திமூலம் தகவல்கொடுத்ததால்தான் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்துவிட்டு பொலிஸ்நிலையத்திற்குச் சென்றேன்.

### துப்பாக்கிப் பிரயோகம்

''காலை 10 மணிக்கு நான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றேன். கூட்டத்தினர் கடையைக் கொள்ளையடித்ததாகவும் அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். நான் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகளைப் பரிசோதனைசெய்தேன். அவைகள் பாவிக்கப்படாமலிருந்தன. சிலகடைகள் சேதப்படுத்தப்பட்டிருந்தது. கடைக்கு முன்னல் பொருட்கள் எரிக்கப்பட்டிருந்தன.

### விசாரணை நடக்கிறது

''இக்கலவரங்கள் பற்றிச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. யாழ் நகரில் நடந்த கலவரத்தினல் இருபத்தைந்துலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவை கொள்ளை, தீ வைத்தல் போன்ற சம்பவங்களின் மொத்த சேதமாகும்.

'இறந்தவர்களின் நலன்களைக் கவனிக்கச் சட்டத்தரணிகளான எஸ். நடராசா, ஆர். விஸ்வநாதன், ஜிம்மி ராசரத்தினம். த. சோமசுந்தரம், எஸ். லோகேஸ்வரன், ஏ. அன்ரனி, சிவா கணேசன், வரதராசா ஆகியோர் ஆஜராஞர்கள். பொலிஸ்தரப்பில் உதவிப்பொலிஸ் அதிபர் சில்வா ஆஜராஞர்.

விசாரணை 29-ந் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வழமைக்குத் திரும்பும் யாழ். நகரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரத்தின் நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. மிகக்குறைவான கடைகள் மட்டுமே நேற்று திறக்கப்பட்டிருந்தன.

தேநீர் கடை, ஹோட்டல்கள், உணவுச்சாலைகள் திறக்கப்பட்டிருந்த போதிலும், வழமையான வியாபாரம் நடைபெறவில்லை. சில ஜவுளி நிலையங்கள் திறக்கப்பட்டிருந்த போதிலும், வியாபாரம் மந்தமாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை பாணுக்கு பெரும் தட்டுப்பாடாக இருந்தது. சின்னக்கடை பகுதியில உள்ளபேக்கரி ஒன்றில் பெரியவர்கள், சிறுவர்கள், பெண்கள், நேற்றுக்காலை நீண்ட கியூவில் பாணுக்காக நின்றனர்.

ஆஸ்பத்திரியில் வெளி நோயாளிகள் குறைவாகவே காணப்பட்டனர். பஸ்சேவைகள் வழக்கம் போல் காணப்பட்ட போதிலும் பிரயாணிகள் குறைவாகவே காணப்பட்டனர்.

தியேட்டர்களில் சினிமா காட்சிகள் எதுவும் நடைபெறவில்லை. சிலகடைகள் ஒற்றைக் கதவிலேயே திறக்கப்பட்டு வியாபாரம் நடந்தது அச்சம் காரணமாகவே கடைகளை திறக்கவில்லை என வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் பிரதான வீதிகளில ரோந்து சுற்றி வருகின்றனர்.

பழைய மார்க்கட்டுக்கு எதிரில் உள்ள கடைகள் யாவும் பூட்டப்பட்டே இருக்கின்றன. அருகில் உள்ள ஜவுளிக்கடைகளும் பூட்டப்பட்டே இருக்கின்றன. கடைகளையும், உடமைகளையும் இழந்த வர்த்தகர்கள் எதிரில் உள்ள கடைவாசல்களில் இருந்து, தங்களுக்கு ஏற்பட்ட சேதம்பற்றி அளவளாவிக்கொண்டிருக்கின்றனர்.

கே. கே. எஸ். வீதிக்கு அருகில் தீக்கிரையாகாத சிலகடைகளும் இன்னும் திறக்கப்படவில்லை.

ஆஸ்பத்திரி வீதியில் பழைய மார்க்கட்டிற்கு எதிரில் உள்ள கடைகளில் சில மட்டுமே திறக்கப்பட்டிருந்தன.

தீக்கிரையான பழைய மார்க்கட் பகுதியில் உள்ள குப்பை கூழங்களை யாழ். மாநகரசபை ஊழியர்கள் அப்புறப்படுத்திவிட்டனர்.

பஸ் நிலையத்திற்கு எதிரில் உள்ள கடைகள் பெரும்பாலானவை பூட்டப்பட்டிருக்கின்றன பஸ்நிலையத்திற்கு எதிரில் ஆஸ்பத்திரி வீதியில் சில கடைகள் மட்டுமே திறந்திருந்தன.

மக்கள் அவசர அவசரமாக தங்கள் அலுவல்களை முடிப்பதை அவதானிக்கக்கூடியதாயிருந்தது. பஸ் நிலையத்தில் பிற்பகல் பிரயாணிகள் கூடுதலாகக் காணப்பட்டனர்.

யாழ். நகரத்தில் தீக்கிரையான பழைய மார்க்கட்டையும், சேதமடைந்த சிலைகளையும் கடைகளையும் பார்ப்பதற்குதினமும் கிராமப்புறங்களிலிலுமிருந்து பலர் வந்துகொண்டிருக்கின்றனர்.

யாழ் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் நகரத்தின் பலஇடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு, தேவையான வசதிகளை செய்துகொடுத்து வருகிறர். வீதிகளில் வெளிச்சமில்லாது இருந்த இடங்களுக்கு பல்புகள வழங்கியதுடன் நீர்வசதிகளையும் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டோர் முகாம்களுக்கு சென்று பார்வையிட்ட திரு. கே. சிவஞானம், முகாம்களுக்கும், தண்ணீர் வசதியும், மின்சார வசதியும், மற்றும் மலசலகூட வசதிகளும் செய்து கொடுத்துள்ளார். (க)

## கொழும்பு - பலாலி விமானச் சேவை:

## தினசரி 5 சேவைகள் நடத்தும் 'டி.சி. - 8'

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையின் மிகப்பெரும் விமானங்களில் ஒன்ருன 'டி. சி. -8' பாதுகாப்புக்கருதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் தமிழ் மக்களை ஏற்றிச் செல்லும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

169 பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய இவ்விமானம் நாள் ஒன்றுக்கு 5 தடவைகள் பலாலி வந்து செல்கின்றது.

பலாலி விமான நிலையத்தில் இவ்விமானம் இறங்குவதற்குப் போதிய வசதிகள் இல்லை என்று கருதப்பட்ட போதிலும் விமானக் காப்டன்கள் திரு. ஆர். பாலதரன், ஜி. ஈ. எல். பேடினன்ட்ஸ் மனேஜர் திரு எஸ். கணேசமூர்த்தி ஆகியோர் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இவ்விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விமானம் கொழும்பிலிருந்து சுமார் அரை மணித்தியாலயத்தில் பலாலிக்கு வருகிறது.

பலாலி விமான நிலையத்தில் இந்த 'டி. சி-' விமானம் இறங்குவதில் எதுவித கஷ்டமும் இல்லை என்றும் விமானநிலைய ஓடுபாதை போதுமானதாக உள்ளது. என்றும் காப்டன் பேடினன்ட்ஸ் தெரிவித்தார்.

இந்த விமானத்தில் காப்டன்கள் திரு. பாலதரன், பேடினன்ட்ஸ், விமானசேவை பொறியியலாளர் திரு. விவேகானந்தன், கே. என். சிவஞானசுந்தரம் ஆகியோர் பணியாற்றுகின்றனர், (இ)

## காங்கேசன்...

## எல்லோரும் நிதிதிரட்டவேண்டாம்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிலுள்ள பொது மக்களும், சமூகமன்றங்களும், பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக உணவு, உடை, நிதி திரட்டும் பணிகளைச் செல்வதால் இவர்கள், இன்றுமுதல், இச் சபையின் அதிகாரம் பெற்றே இனி சேவையில் ஈடுபட முடியும். ஓரிரு தினங்களில் சேவையில் ஈடுபடுபவர்கள், தொண்டர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட, அனுமதிப்பத்திரமின்றி பாதிக்கப்பட்டவர்களுக்காக உணவு, உடை, நிதிதிரட்டமுடியாது. பொதுமக்களின் பேராதரவு பெருமளவில் இச்சபைக்கு தேவையானபடியால், அங்கீகரிக்கப்பட்ட தொண்டர்களின் மூலமே உதவுமாறு சபை கோருகின்றது.

சபை பாதிக்கப்பட்ட தமிழ் சகோதரர்களுக்கு புனர்வாழ் வழிக்கும் பணிக்கான திட்டங்களை வகுக்கவும், செயல்படவும் முடிவாகியுள்ளன. உணவு வகைகளை பெருமளவில் சேகரித்து உதவுவதால் பயனற்ற முறையில் பழுதடைந்து விடுகின்றன என்று மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. தற்காலிகமாக உணவு வழங்குபவர்கள் உணவுத்தேவைக்குப் பொறுப்பான, வண. பிஷப் ஜே. ஜே. ஞானப்பிரகாசம் (பரியோவான்கல்லூரி), வண. எம். ஏ. இரத்தினராஜா (திம்மர்மண்டபம், யாழ்ப்பாணம்), ஆகியோருடன் தொடர்பு கொண்டு தேவையறிந்து செய்யுமாறு, கோரப்பட்டுள்ளனர். நிதியுதவி செய்யும் அன்பர்கள் திரு. லங்கா, நேசையா, (வர்த்தக, வங்கி, யாழ்ப்பாணம்) திரு. ஆர். ரி. குணரெத்தினம் (யாழ். ரோட்டறிக் கழக தலைவர்) மூலமாக நிதி வழங்கலாம்.

இப்பணிக்கான, தொண்டர்கள் நியமிக்கும்பணி விரைவில், ஒவ்வொரு கார்யாதிகாரி, பிரிவில் அமைக்கப்படும் அதுவரை யாழ். மாவட்ட சமூகசேவை உதவி அத்தியட்சகர் திரு. கெங்காதரன் மூலம் தகவல்களை சேகரித்துக் கொள்ளமுடியும்.

சபை முடிவிற்கமைய ஒவ்வொரு குடும்பத்தினரும் நாளொன்றுக்கு ஒருபிடி அரிசியும் 10 சத பண உதவியாவது தவருமல் செய்யவேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

## நிலைபெயர்ந்த அரசஊழியர் கோரிக்கை

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களையடுத்து இங்கு வந்துள்ள அரசாங்க ஊழியர்கள் நிறுவியுள்ள சங்கமான 'நிலைபெயர்க்கப்பட்ட அரச ஊழியர் சங்கம்' பின்வரும் கோரிக்கைகளை மேலிடத்துக்கு சமர்ப்பிக்கவிருக்கிறது.

நிலைபெயர்க்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு இயன்ற அளவு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உடன் வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்படி வேலைவாய்ப்பு கொடுபடமுடியாதவர்களுக்கும், வேறு இடங்களுக்கு செல்லவிரும்பாதவர்களுக்கும்,

(அ) 5 வருட சேவைபூர்த்தி செய்தவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளதுபோன்று ஓய்வூதியத் திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

(ஆ) 5 வருட சேவை பூர்த்தியாகாதவர்களுக்கு அவர்களின் வேலை இழப்புக்காக நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

சங்கத்தின் இக்கோரிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்களும் மேலும் ஆலோசனைகள் கூற விரும்புபவர்களும் யாழ். நாவலர் வீதி 146 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் சங்கத்தின் அமைப்பாளர் டாக்டர் ஜே. பாலசிங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## நவக்கிரி ச. ச. நிலைய வெள்ளி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலைய வெள்ளிவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது இவ்விழா அடுத்தமாதம் 2 ம் திகதி நடைபெறுவதாக இருந்தது.

## சாரணர்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி )

காமம் வடக்கு சாரணர்கள் அனைவரும் சேவையில் ஈடுபடுமாறு யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. எஸ். கந்தமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ)

## 2 சூட்கேசுகள் மறைந்தன

யாழ்ப்பாணம், வெள்ளி

கண்டியிலிருந்து நேற்றுமுன் தினம பஸ்ஸில் திரும்பிய பேராதனை வளாக மருத்துவ பீடமாணவர்கள் இருவர் பஸ்ஸில் தமது முக்கிய புத்தகங்கள், பாடக்குறிப்புக்களுடன் இரு சூட்கேசுகளை தவறவிட்டுள்ளனர்.

கண்டியிலிருந்து வந்த இவர்களது பஸ் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து ஸ்டான்லி கல் லூரிக்குச் செல்லும் வழியிலேயே இந்த சூட்கேசுகள் காணமற் போனதாகவும் அம்மாணவர்கள் தெரிவித்தனர்.

# ஈழத்தமிழர்களின் பிரச்னையை

# ஐ. நா.வில் எழுப்ப வேண்டும்!

## பாரதப்பிரதமர் மொரார்ஜிக்கு அ. தி. மு. க. கோரிக்கை

சென்னை, ஆக.25 இலங்கைத் தமிழர் பிரச்னையை, ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. கோவை செழியன், இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைக் கேட்டுள்ளார்.

அண்ணா திராவிடமுன்னேற்றக்கழக ஸ்தாபகரான திரு கோவை செழியன், இலங்கையில் தமிழர்கள்பாதிக்கப்பட்டிருப்பது குறித்து வருத்தமும், கண்டனமும் தெரிவித்துள்ளார்.

பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையில் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

"ஈழத்துத் தமிழர் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபையில் கிளப்பி நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட வழிவகுக்கப்படவேண்டும். இவ்விஷயத்தில் பாரதப் பிரதமர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் நீதிகிடைக்க வழிவகுக்கவேண்டும்" என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாஜி அமைச்சர்கள் உட்பட 2000 பேர் கைது!

### மாண்டவர் தொகை 70

(புதுடில்லி)

இலங்கையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் எழுபது பேர் வரை இறந்திருக்கின்றனர் என்று இந்திய வானொலி அறிவித்துள்ளது.

நேற்றிரவு இந்திய வானொலி ஒலிபரப்பிய செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: "இலங்கையில் தலைதூக்கிய வன்முறைச்சம்பவங்கள், அசம்பாவிதங்கள் தொடர்பாக இதுவரை இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் முன்னர் ஆட்சி நடத்திய அரசியல் கட்சியைச் சேர்ந்த ஐம்பது பேரும் உள்ளனர்.

"கைதானவர்களில் இரண்டு பேர் முன்னாள் அமைச்சர்களாவர்".

"நிலைமை முழுக்கட்டுப்பாட்டுக்குள் வராததால் மீண்டும் ஊரடங்குச் சட்டம் நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ளது."

"பாதிக்கப்பட்ட தமிழர்களை ஏற்றிக்கொண்டு மூன்று கப்பல்கள் நேற்று கொழும்பிலிருந்து நாட்டின் வடபகுதியை நோக்கிப் புறப்பட்டது."

## 'வெளிவிவகார அமைச்சரை ஈழத்துக்கு அனுப்புக'

சென்னை, ஆக. 25 இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் முன்னாள் தமிழக அமைச்சர் திரு. ஏ.வி. அழகேசனும் குரல் எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து திரு அழகேசன் பாரதப்பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் "ஈழத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நிலையை நேரில் அறிந்து கொள்ளும் பொருட்டு பாரத வெளிவிவகார அமைச்சரை இலங்கைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்" என்று கேட்டுள்ளார்.

## தமிழர் பிரச்னை, ஜெனிவா செல்கிறது!

(லண்டன்)

இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களை, ஜெனிவாவிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றின் கவனத்துக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள.

லண்டனிலுள்ள வழக்கறிஞர் திரு சமரகுரு, இதற்கான ஒழுங்குகளைக் கவனிக்கும் பொருட்டு நேற்று லண்டனிலிருந்து ஜெனிவாவுக்குப் பயணமானார்.

ஜெனிவாவிலுள்ள அகதிகள் புனர்வாழ்வு மற்றும், சிறுபான்மை இனத்தவர்கள் சம்பந்தமான நலன்களைக் கவனிக்கும் உலக நாடுகள் நிறுவனத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களை திரு. குமரகுரு எடுத்துரைப்பார். இவருக்கு உதவியாக மற்றுமொரு வழக்கறிஞரும் லண்டனிலிருந்து ஜெனிவா சென்றுள்ளார்.

### ஈழவிடுதலை முன்னணி

இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு விஷயங்களிலும் ஆதரவும் உதவியும் அளிப்பதில் லண்டனிலுள்ள ஈழவிடுதலை முன்னணி இயக்கம் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. உடனடியாக நிதியொன்றை ஆரம்பிக்க இந்த இயக்கம் முடிவு செய்துள்ளது. இதுபோல, சிங்கப்பூரிலுள்ள ஈழவிடுதலை முன்னணியும் செயல்படத் தொடங்கியுள்ளது.

## புதுச்சேரி சட்ட சபையும் தீர்மானம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் இந்திய மத்திய அரசு தலையிடவேண்டும் என்று கோரும் தீர்மானமொன்று, நேற்று புதுச்சேரி சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்போன்றே புதுச்சேரி சட்டசபைத் தீர்மானமும் அமைந்திருந்தது. மத்திய அமைச்சர் ஒருவரை இலங்கைக்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலையை நேரில் அறிந்துகொள்ள பாரதப் பிரதமர் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் இத்தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## இவர்கள் சம்பளம் பெறலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அநுராதபுர மாவட்ட கட்டட திணைக்களத்தில் கடமையாற்றிய தமிழ் ஊழியர்களுக்கு இன்று யாழ்ப்பாணத்தில் அவர்களின் மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

இத்தகவலை மாவட்ட பொறியியலாளர் திரு எஸ். இராசநாயகம் தெரிவித்தார்.

அநுராதபுரம் கட்டட திணைக்களத்தில் கடமையாற்றி கலவரம் காரணமாக யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழ் ஊழியர்கள், யாழ். பீச்ரோட்டிலுள்ள யாழ். மாவட்ட கட்டட திணைக்களத்தில் இன்று மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். (ஈ)

## மரண அறிவித்தல்

### வை. பொன்னம்பலம்

மானிப்பாய் வடக்கு பொன்னம்பலம் 25-8-77ல் காலமானார். இவர் செல்லம்மாவின் அருமைக் கணவரும், காங்கேசு (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியர்), திருமதிகள் அன்னலட்சுமி, சிவபாக்கியம், சரஸ்வதி, நவரத்தினம், கோகிலாதேவி, கிருஷ்ணபவானி ஆகியோரின் அருமைத் தந்தையும், வீரசிங்கம் (கோலாலம்பூர்), திருமதி காங்கேசு (ஆசிரியை மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிவபாதசுந்தரம் (விவசாய இலாகா வவனியா), இராசையா (மின்சார இலாகா), செல்வரத்தினம் (முன்னாள் ஸ்ரோர் கீப்பர், உவாக்கஸ்), கனகசபாபதி (மலேசியா), பாலசிங்கம் (வர்த்தகர், நாவலர் ரோட், யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனும், தாமோதரம்பிள்ளை (பரந்தன்) அவர்களின் சகோதரருமாவார். இவரது ஈமக்கிரியை இன்று 26-8-77 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் ரோட், பொன்னம்பலம் வீதியில் நடைபெறும்.

தகவல்: பொ. காங்கேசு.

6894

## 13 முன்னாள் எம். பி.க்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு

### விசாரணைகள் நடக்கின்றன

கொழும்பு, வெள்ளி

பதின்மூன்று முன்னாள் எம். பிக்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணைகள் நடைபெற்று வருவதாக லஞ்ச திணைக்கள ஆணையாளர் திரு இயன் விக்கிரமநாயக்கா தெரிவித்தார்.

இவர்களில் 12 பேர் மீது சொத்துக்கள் மோசடி தொடர்பாகவும் ஒருவர் மீது லஞ்ச ஊழல் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் இவர்களுள் நான்கு முன்னாள் பிரதி அமைச்சர்கள் அடங்குவர் என்றும் திரு,விக்கிரம்நாயக்கா கூறினார்.

விரைவில் மேலும் 21 எம் பிக்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடைபெறும் என்றும் அவர் கூறினார். (இ)

## "தடுத்து நிறுத்துங்கள்"

யாழ்ப்பாணம், வியா.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிப்பதுடன் அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாகப் பலியாவதை உடன் தடுத்து நிறுத்தி அவர்களின் உடமைகளையும் பாதுகாத்து உதவும்படி பிரதமர் திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் பொலிஸ் மாஅதிபரையும் குப்பிழான் மக்கள் பொதுப் பணிமன்றத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் திரு க. பொ. நடனசிகாமணி அவசர தந்திமூலம் கேட்டுள்ளார். (உ)

## பயந்துஓடினர்!

யாழ்ப்பாணம், வியா.

செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் இராணுவ வீரர்கள் சிலர் டாங்கியுடன் நல்லூர் கந்தசுவாமிகோவிலின் தடைபோடப்பட்டுள்ள பகுதிக்குள் பிரவேசித்தமையால், அமைதியான முறையில் நின்று வழிபட்டுகொண்டிருந்த பொதுமக்கள் பலர் நாலாபக்கமும் சிதறியோடினார்கள். மக்கள் கோவில் பூசையில் 7 மணிக்குக் கலந்துகொண்டிருந்த போது திடீரென இவ்வாகனங்கள் பிரவேசித்தன. (கா)

## இராணுவம் தாக்கியதாம்!

பண்டத்தரிப்பு, வியாழன் மாதகல் கடற்கரைக்குச் சமீபமாகப் பகல் நேரத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்தவர்களை இராணுவத்தினர் தாக்கினார்களாம்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் திருக்கை வாலினால் இராணுவத்தினர் தம்மைத் தாக்கியதாகவும், இது பற்றித் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. உத்ரா ராஜசிங்கத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka